# நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-11-26

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம்* 34: 11-12, 15-17,

*திருப்பாடல்* 23: 1-2. 3. 5. 6,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 15: 20-26,28,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 25: 31-46)

*திருப்பலி முன்னுரை*

*கடவுளுக்குரியவர்களே, கிறிஸ்து அரசர் பெருவிழா கொண்டாட்டத்துக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். ஆட்சி செய்வதற்கு தகுதியுள்ள ஒரே ஒருவரான நம் ஆண்டவர் இயேசுவின் அரசத்தன்மை குறித்து சிந்திக்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. உலகின் முடிவில் நல்லோரையும், தீயோரையும் நம் ஆண்டவர் இயேசு பிரித்து தீர்ப்பு வழங்கும் வேளையில் எந்த பக்கம் நிற்க வேண்டும் என்பதை முடிவு செய்ய நாம் இன்று அழைக்கப்படுகிறோம். அனைத்துலகின் அரசரான நம் ஆண்டவர் இயேசுவின் இரக்கத்தைப் பயன்படுத்தி, அவரது வலப்பக்கத்தில் நிற்கத் தகுதி பெறுவதற்கு ஏற்ப வாழ வரம் கேட்டு, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***திருச்சபையின் ஆயரே இறைவா,***

*உமது நிலையான அரசை உலகெங்கும் நிறுவும் ஆர்வத்துடன், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், நற்செய்தி பணியாற்றிட வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***அரசர்களின் அரசரே இறைவா,***

*உமது அரசின் பரவலுக்கு எதிராக செயல்படும் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் பதவி இழக்கவும், உலகெங்கும் உமது அரசு கட்டியெழுப்பப்படவும் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***மாட்சியின் மன்னரே இறைவா,***

*எம் நாட்டு மக்கள் அனைவரும் உண்மையின் நற்செய்தியை விரும்பித் தேடவும், உம் திருமகனின் மேலான ஆட்சியை மனமுவந்து ஏற்கவும் துணை புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***அளவற்ற அன்புக்கு அடித்தளமான இறைவா!***

*யாரும் நினையாத உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்கள் அனைவரையும் உம் பாதத்தில் அர்ப்பணிக்கின்றோம். அவர்கள் அனைவரையும் விரைவாக உம் இல்லத்தில் அழைத்து, பரிசுத்தர்கள் கூட்டத்தில் சேர்த்து, உம்மைப் போற்றி புகழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*